நல்லூர் கிளை நூலகம்
மாதகர ... றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5 00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 04 வியாழக்கிழமை (18 06-1992) UTHAYAN -- A Lively National Tamil Daily கதிர் 203

# போரை முடிவுக்குக் கொண்டு வர கால எல்லை நிர்ணயிக்கப்படும்

## அமைச்சர் ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

வடக்கு கிழக்கில் கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்று வரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கால எல்லை நிர்ணயிக்கப்படும்.

அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரணில் விக்கிரமசிங்க நேற்று நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் மிகுந்த முன்னேற்றம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் திரு ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ள ஜனாதிபதி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்ப்புக்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும் என்று உறுதி கூறி உள்ளார். இவ்வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வு எட்டப்படும் என்பதில் ஜனாதிபதி நம்பிக்கை கொண்டுள்ளார்.

அண்மையில் எட்டு அரசியல் கட்சிகள் ஜனாதிபதியைச் சந்தித்தன. அச்சந்திப்பு சம்பந்தமான ஜனாதிபதியின் நிலைப்பாடு அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் தெரிவிக்கையில் —

நீண்டகாலம் நிலைக்கக் கூடிய தீர்வு ஒன்றைக் காணுமாறு, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களிடம் ஜனாதிபதி கூறி இருப்பதாகத் தெரிவித்தார்.

[இ-எ-10]

### அலம்பில் பகுதியில்

## பொதுமக்களின் உடைமை பெருமளவில் சேதம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

கடந்த சில வாரங்களாக அலம்பில் பகுதியில் இருந்து குமுழமுனை நோக்கி முன்னேற படையினர் எடுத்த முயற்சிகளின்போது பொது மக்களின் உடமைகளுக்குப் பெரும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

குமுழமுனைப் பகுதியில் பாடசாலை ஒன்றும், பிள்ளையார் கோவில் ஒன்றும், பல வீடுகளும் சேதமடைந்துள்ளன என்றும்—

உப்புவெளி ப. நோ. கூ. சங்கம் விமானத் தாக்குதலினால் சேதமடைந்துள்ளது. என்றும் தெரிவிக்கப்பட்டது.

உப்புவெளி, உடுப்புக்குளம், சிலாவத்தை ஆகிய இடங்களில் தமிழ் மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களும் நாசமாக்கப்பட்டுள்ளன.

[ஓ 5]

## மண்எண்ணெய் மாயம்! கடைகளில் 'கியூ'!!

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணப் பகுதியில் நேற்று திடீரென மண்எண்ணெய் மாயமாக மறைந்து விட்டது. வழமையாக யாழ். முத்திரைச்சந்தையில் காட்சிக்கு அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் மண்எண்ணெய் போத்தல்களும் நேற்று காணப்படவில்லை. அவை வெறுமையாகக் காட்சி அளித்தன ஏனைய பகுதிகளிலும் இதே நிலைமையே காணப்பட்டது.

கொள்கலன்களுடனும், போத்தல்களுடனும் மக்கள் நேற்று வீதி வீதியாக அலைந்து திரிந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. சில கடைகளின் முன்னால் மக்கள் வரிசையாக (கியூவில்) நின்று மண்எண்ணெயை வாங்கிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இதனிடையில் கடந்த இரண்டு தினங்களாக மக்கள் பொருள்களை அதிகளவில் வாங்கி சேமித்து வருவதால் பொருள்களுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஓ-162-5]

## இந்தியாவின் கோரிக்கை பரிசீலனையில் உள்ளதாம்

கொழும்பு, ஜூன் 18

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக குற்றஞ் சாட்டப்பட்டு உள்ள திரு. பிரபாகரன், திரு. பொட்டம்மான் ஆகியவர்களை தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா விடுத்த கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கிறது.

ஜனாதிபதி பிரேமதாஸாவின வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன், இத்தகவலை நேற்று செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

இது தொடர்பான இந்தியாவின் கோரிக்கை சென்ற வாரம் அரசாங்கத்துக்குக் கிடைத்ததாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக மூன்று குழுக்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க இந்தியா அனுமதி கேட்டிருக்கிறது என்றும் —

இலங்கை அரசு இரண்டு குழுக்களுக்கு கொழும்பு வர ஏற்கனவே அனுமதி வழங்கி விட்டது என்றும் திரு. வீரக்கூன் தெரிவித்தார்.

திரு. பிரபாகரனையும் திரு. பொட்டம்மானையும் தம்மிடம் ஒப்படைப்பது பற்றி பேச்சுகள் நடத்த மூன்றாவது குழு இலங்கைக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று இப்போது இந்தியா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பீரங்கிப் படகுகள் ரோந்து

யாழ்ப்பாணம், ஜூன் 18

மாதகல் கடற்பகுதியில் பாரிய கடற்படைக் கப்பல் தொடர்ந்து தரித்து நிற்பதாகவும் கப்பலுக்கு பாதுகாப்பாக பீரங்கிப் படகுகள் அப்பகுதியில் ரோந்து புரிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஓ-5)

## அவ்ரோ நோட்டம்

தென்மராட்சி, ஜூன் 18

அவ்ரோ விமானம் ஒன்று நேற்று சாவகச்சேரிப் பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டது.

இதனால் நகரப் பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டு பொதுமக்கள், வியாபாரிகள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

இதேசமயம் கொம்படி மற்றும் தென்மராட்சியின் ஏனைய சில பகுதிகளையும் மற்றும் அராலித் துறை, பொன்னாலை பகுதிகளையும் அவ்ரோ நோட்டமிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-117-5]

## வாகரையிலும் படை குவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முகாம்களில் இராணுவத்தினரின் எண்ணிக்கை சமீப நாட்களாக அதிகரிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களுக்கு இலக்காகி வரும் வாகரைப் பகுதி முகாம்களில் பெரும் எண்ணிக்கையிலான படையினர் குவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[ஓ-5]

### நீண்ட இடைவெளிக்குப் பின்

## தெரிவுக்குழு நேற்று மீண்டும் கூடியது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டம் நேற்று (புதன்கிழமை) மீண்டும் நடைபெற்றது.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா, நாடாளுமன்றக் கட்டடத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

இம்மாத முற்பகுதியில் தம்மைச் சந்தித்த எட்டு அரசியல் கட்சிகள் விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலத்துக்குள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொருத்தமான அரசியல் தீர்வு ஒன்றைக் காணு முகமாக நாடாளுமன்றத் தெரிவுக்குழுக் கூட்டத்தைக் கிரமமாக நடத்தும்படி ஆளும் கட்சி எம். பிக்கள் அனைவரையும் ஜனாதிபதி கேட்டுள்ளார் என்றும் அமைச்சர் சொன்னார்.

இழுபறி நிலையில் இருந்து வந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு நீண்ட காலத்தின் பின்னர் நேற்று கூடியது குறிப்பிடத்தக்கது.

[ஓ-எ]

## கனடாவில் தமிழர் கடையில் கொள்ளை

### இலங்கைக் குழு கைவரிசை

ஒட்டாவா ஜூன் 18

கனடாவில் இரண்டு தமிழர்களுக்குச் சொந்தமான வீடியோக் கடை ஒன்றை இலங்கைக் குழு ஒன்று கொள்ளையிட்டது என்றும் -

அங்கிருந்த இளைஞர் ஒருவரை அக்குழு கடத்திச் சென்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்திச் செல்லப்பட்ட 19 வயது இளைஞர் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டார்.

கனடா டொரன்டோவில் மிட்லனட் அவெனியூவிற்கு கிழக்கே உள்ள எலக்மோர் அவெனியூ என்னும் இடத்திலேயே இந்தச்சம்பவம் இடம் பெற்றது.

மூன்று கார்களில் இரவு நேரம் வந்த, சுமார் 10 பேர் கொண்ட - குழு ஒன்றே கடை ஜன்னல்களை அடித்து நொறுக்கி, பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றது என்று கடை உரிமையாளர்களில் ஒருவர் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

(உ-த)

### தெல்லிப்பழைப் பகுதியில்

## ஜீப் கண்ணியில் சிதறியது; சிப்பாய் பலி; மூவர் படுகாயம்

தெல்லிப்பழைப் பகுதியில் இராணுவ ஜீப் ஒன்று விடுதலைப் புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கி வெடித்துச் சிதறியது என்றும்—

இதில் அரச படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் மேலும் மூன்று படையினர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

[ஓ-எ-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டை ரயில் நிலையத்தில் சிவில் உடையில் பொலீஸார்

கோட்டை ரயில் நிலையத்தில் சாதாரண உடை அணிந்த பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 6 ஆம் திகதி கோட்டை ரயில் நிலையத்தில் வைத்து சி. ஐ. டி எனக் கூறி பிரயாணி ஒருவரிடமிருந்து 90 ஆயிரம் பணம் கொள்ளையிடப்பட்டது தெரிந்ததே.

இதனை அடுத்தே பிரதி பொலீஸ்மா அதிபர் ஏ. எஸ். செனிவிரத்னாவின் உத்தரவின் பேரில் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 11-30 மணிவரை சாதாரண உடையணிந்த பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சி ஐ. டி. எனக் கூறி யார் வந்தாலும் அதனை உடனடியாக ரயில் நிலைய அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வருமாறு கோட்டைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (த)

---


## கொக்குவில் சாரதா ஐக்கிய நாணய நிதியம்

## பொதுக் கூட்ட அழைப்பு

யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரால் அளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டத்தை 21 06-1992 ஆம் திகதி மாலை 3-00 மணிக்கு கொக்குவில் கிழக்கு சாரதா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்த உத்தேசித்து உள்ளனர். ஆகவே மேற்படி சங்க அங்கத்தவர்கள் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**நிகழ்ச்சிகள்**

1. சங்கத்தின் புனரமைப்பு.
2. புதிய உத்தியோகத்தர் தெரிவு.

பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி - உத்தியோகத்தர்,
க. இந்திராணி.

(சி-2130)


---


## இலங்கைச் செஞ்சிலுவை சங்கம், யாழ் கிளை, தலைமையகம்

## தோல் பதனிடும் உத்தியோகத்தர்

எமது பணிமனையில் தோல் பதனிடும் உற்பத்தியை திறம்பட நடைமுறைப்படுத்தக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பட்டதாரி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (N D T) அல்லது அதற்கு சமமான கல்வித் தராதரம், தகைமை, அனுபவம், ஆற்றல், ஆர்வம் உள்ளோரிடமிருந்தும், உள்ளூரிலேயே கடமை புரியக் கூடியவர்களும் விரும்பப்படுவர்.

விண்ணப்பங்கள் யாவும் **25 - 06 - 1992** க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை **27 - 06 - 1992** முற்பகல் **10.00** மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா.
கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்
16 - 06 - 92.

[சி-2126]


---


## 45ஆம் நாள் நினைவஞ்சலி

"சிவதொண்டன்"

## நாகமுத்து நாகலிங்கம்

(லிங்கம் டிராக்டர் உரிமையாளர்)

தோற்றம்:
**04-02-1921**

மறைவு:
**04-05-1992**

நீங்கள் செய்த சிவ தொண்டுகள் பல உண்டு ஐயா! நீங்கள் நயினை நாகபூஷணி அம்மனின் அடியார்களுக்கு தாகசாந்தி தீர்த்தீர்கள் ஐயா! நல்லூர்க் கந்தன் அடியார்களுக்கு மகேஸ்வர பூசை செய்தீர்கள்! வேலணையில் உள்ள ஆலயங்களில் உள்ள வேலைகளை உங்கள் வாகனமூலம் தொண்டு செய்து முடித்தீர்கள் ஐயா. இன்னும் பல பல தொண்டுகள் உண்டு.

இவரின் 45ஆம் நாள் நினைவு நாளை நினைத்து உற்றார், உறவினர், அந்த ஊர் மக்கள் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க. கேதீஸ்வரன்.

268, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி.

[21432]


---

## இன்று

நவாலி, ஜூன் 18

நவாலி சென்பீற்றேர்ஸ் பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று 18 வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பாடசாலை விளையாட்டரங்கில் நடைபெறும்.

## நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 18

கந்தர்மடம், பழம் வீதி ஸ்ரீ சித்தி விநாயகர் கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நடைபெறும்.

## பண்டத்தரிப்பு கோட்ட அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற இருப்பதாக கோட்டக்கல்விப் பிரதிப் பணிப்பாளர் திரு. சி. வே. மகேசவேலு அறிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர் நிலைமை உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதால் சகல அதிபர்களையும் தவறாது அதில் கலந்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-5)

## விபத்தில் காயம்

தென்மராட்சி ஜூன் 18

வீதியில் நின்ற லொறியை தாண்டிச் செல்ல முயன்றவர் எதிரே வந்த வாகனமொன்றினால் மோதப்பட்டு படுகாயமடைந்த நிலையில் அதே வாகனத்தில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

கடந்த வெள்ளி பளை வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பளை வேம்போடு கேணியைச் சேர்ந்த சி. கிருஷ்ணபிள்ளை (வயது 40) என்பவரே காயம் அடைந்தவராவார். (த-117)

## மருந்துப் பொருள்கள் தட்டுப்பாடு

தாளையடி, ஜூன் 18

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பஞ்சு, பண்டேஜ், குளுக்கோஸ் உட்பட சாதாரண மருந்துப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [த-144]

## புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். பல்கலைக்கழகத்துக்கு தேவையான காகிதாதிகளை எடுத்துச் செல்ல புதிய நடைமுறை ஒன்றை கூட்டுப்படைத் தலைமையகம் நடைமுறைப்படுத்தவிருக்கிறது.

ஒரு வருடத்துக்கு தேவையான காகிதாதிகளின் மொத்த தொகையைத் தெரிவித்தால், பங்கிட்டு 2 மாதத்துக்கு ஒருதடவை அவற்றை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க முடியும் என்று கூட்டுப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

## யூகோ. தூதரகம் மூடப்பட்டது

கொழும்பு, ஜூன் 18

கொழும்பில் உள்ள யூகோஸ்லேவியா தூதரகம் இம்மாத ஆரம்பத்துடன் மூடப்பட்டு விட்டது.

யூகோஸ்லேவியா சமஷ்டிக் குடியரசில் உள்ள மாநிலங்கள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து சென்றதைத் தொடர்ந்து, யூகோ. தூதரகம் மூடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-...]

## சண்முகத்தின் மைத்துனர் கடத்தப்பட்டார்!

சென்னை, ஜூன் 18

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகக் கைதாகி பின்னர், வேதாரணியம் பொலீஸாரின் காவலில் இருந்து தப்பிச் சென்று தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுவரின் மைத்துனர் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளார்.

வேதாரணியத்தைச் சேர்ந்த மிராசுதார் சண்முகம் என்பவர் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பொலீஸ் காவலில் இருந்து தப்பிச் சென்று தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்பட்டமை தெரிந்ததே. அவரின் மைத்துனரான வைத்தியநாதன் என்பவரே இப்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் குடியாத்தம் பகுதியிலுள்ள தமது இல்லத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாக அவரது மனைவி பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார். (த)

# ஐரோப்பிய சமூகத்தின் அலுவலகம் கொழும்பில்

கொழும்பு ஜூன் 18

ஐரோப்பிய சமூகம் விரைவில் தனது நிரந்தர அலுவலகம் ஒன்றை இலங்கையில் நிறுவ இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய சமூகத்தின் உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் உதவித் திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றது என்பதைக் கண்காணிப்பதே இலங்கை அலுவலகத்தின் கடமையாக இருக்கும் என்று தெரியவருகின்றது.

ஐரோப்பிய சமூகத்தின் தலைமைப் பதவியை போர்த்துக்கலிடம் இருந்து பிரிட்டன் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி பொறுப்பேற்கவிருக்கிறது அதன் பின்னரே ஐரோப்பிய சமூகத்தின் இலங்கை அலுவலகம் திறக்கப்படும் என்று தகவல் அறிந்த ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஐரோப்பிய சமூகத்தின் பிரதிநிதி ஒருவர் ஆண்டுக்கு ஒரு தடவை கொழும்பு வந்து இலங்கை நடவடிக்கைகளை பார்வையிட்டு விட்டு செல்வது வழக்கம் என்றும் —

ஏனைய பரிவர்த்தனைகள் பிரஸ்ஸல்ஸ் நகரில் உள்ள இலங்கைத் தூதரகமும் ஐரோப்பிய சமூகமும் பரிமாறிக்கொண்டு வருகின்றன என்றும் —

அதனால் இலங்கை பற்றி மூன்றாம் தரப்பினர் கூறுவதையே ஐரோப்பிய சமூகத்தினர் நம்பவேண்டியுள்ளது என்றும் சிரேஷ்ட வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று "சண்டே ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

## பாலை மீன் வளர்ப்பு திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால். கடந்த ஆண்டு இறுதியில் குருநகரில் ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த பாலை மீன் வளர்ப்புத் திட்டம் பூர்த்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இப் பரீட்சார்த்த திட்டத்திற்கென இரண்டாயிரம் வரையிலான பாலை மீன் குஞ்சுகள் மன்னார் மாவட்டம் கிராஞ்சியிலிருந்து கொண்டுவரப்பட்டு குருநகர் வளர்ப்பு நிலையத்தில் விடப்பட்டன. 2.5 செ. மீ. நீளத்துடனும், 5 கிராம் நிறையுடனும் விடப்பட்ட இம் மீன் குஞ்சுகள் 5 மாத காலத்தில் சராசரியாக 28.5 செ. மீ. நீள வளர்ச்சியுடனும், 175 கிராம் நிறை வரையிலான வளர்ச்சியினைப் பெற்றுள்ளன.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடல் தொழிலாளர்கள் பலர் வேலை வாய்ப்பினை இழந்துள்ளதுடன், மீனின் விலையும் அதிகரித்துள்ளன. இந் நிலையில் கடல் நீர்த்தொடுவாய்கள் மற்றும், கரையோர ஆற்றுப் பகுதிகளில் இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பலருக்கு நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கும்,-மீனின் விலையைக் கட்டுப்படுத்தவும் - தமிழீழத்தில் இனங் காணப்படாத வளங்களைக் கண்டறிந்து பயன்படுத்துவதற்கும் ஏதுவாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [த]

## போராட்ட பெறுபேறுகளைப் பேண சமூக மாற்றங்களை வளர்க்க வேண்டும்

### நினைவுப் பேருரையில் பேச்சு

யாழ்ப்பாணம். ஜூன் 18

அரசியல் மாற்றத்துக்கான போராட்டங்கள் நடைபெறுகின்றபோது அந்தப் போராட்டத்தின் பெறுபேறுகளைப் பேணுவதற்காக சமூகக் கட்டமைப்பு மாற்றங்கள் இயல்பாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற செல்வநாயகம் நினைவுப் பேருரையில் கலந்துகொண்டு பேசிய நுண்கலைப் பீடத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு சொன்னார்.

அவர் மேலும் அங்கு பேசும்போது கூறியதாவது:

முன்னர் நிலவிய பொருளாதாரக் கட்டமைப்பு இப்பொழுது படிப்படியாக மாறி வருகின்றது. பாரம்பரியக் கைத்தொழில்களை பாரம்பரிய இடங்களில் செய்ய முடியாமை, அகதிமுகாம்களில் நீண்டகாலம் இருக்க வேண்டிய தேவை, எதிர்பாராத வகையில் ஏற்படும் நிலப்பகிர்வு ஆகியன பொருளாதார முயற்சிகளையும், சமூகக் கண்ணோட்டங்களையும் மாற்றி வருகின்றன — என்றார்.

யாழ். பல்கலைக்கழகத் துணை வேந்தர் அ. துரைராஜா பேசும்போது—

புவியியல் துறைக்குப் புத்துயிரூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்ட திரு. செல்வநாயம், விவசாயம் மீன்பிடி, கிராமிய வளர்ச்சி ஆகிய துறைகளிலும் சிறப்பான பணியாற்றியதுடன், தென்மராட்சிக்கான சமூக பொருளாதார ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதி மக்களின் முன்னேற்றத்திற்கு வித்திட்டவர் என்றார்.

நிகழ்ச்சிகளுக்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமை வகித்தார். (த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# புலிகள் மீதான தடையால் தி.மு.க. திரிசங்கு நிலையில்!

## "இந்து" நாளிதழ் கருத்து

சென்னை, ஜூன் 18

இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு விதிக்கப்பட்ட தடை தி.மு.கவிற்கு ஒரு திரிசங்கு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

— இப்படி ''இந்து'' நாளிதழ் கருத்து வெளியிட்டுள்ளது.

''இந்து'' மேலும் தெரிவித்திருப்பதாவது:-

மக்களுக்கும், தி.மு.கவுக்கும் இடையே விடுதலைப் புலிகள் மீதான கடுமையான எதிர்ப்புணர்வு ஒரு வேலியாக நிற்கிறது. ராஜீவ் கொலையின் பின்னர் விடுதலைப் புலிகள் விரோத உணர்வு மேலும் வெளிப்படையாகி விட்டது.

தி.மு.க. தலைவர்கள் என்னதான் மறுப்புக்களை வெளியிட்டாலும், புலிகளின் சில நடவடிக்கைகளுக்கு அவர்கள் அனுசரணையாக செயற்பட்டார்கள் என்று மக்கள் மனதில் உள்ள எண்ணத்தை யாராலும் மாற்ற முடியவில்லை. இதை தி.மு.க. தலைமைத்துவம் நன்கு அறிந்து வைத்திருப்பது போலத் தெரிகிறது.

இதனால் தான் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை விவகாரத்தில் தி.மு.க. வினால் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியவில்லை.

புலிகள் மீதான தடை குறித்து கருணாநிதி வெளிப்படையாகக் கருத்துக் கூற வேண்டும் என அரசியல் எதிரிகள் அவரைச் சீண்டினாலும், அவர் தனக்கே உரித்தான சாதுரியத்தால் அவ்விடயத்தில் நழுவிக் கொண்டு செல்கிறார்.

புலிகள் மீதான தடையை கருணாநிதி ஆதரிப்பாரேயானால், உலகம் முழுவதும் தமிழர்களின் ''ஆபத்பாந்தவன்'' என்று அவருக்கு அவரது கட்சிக்காரர்கள் சூட்டும் புகழாரம் அர்த்தமற்றதாகிவிடும்.

தடையை அவர் எதிர்ப்பாரேயானால், அவரின் அரசியல் எதிரிகள், அதைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவர்; மாநிலத்தில் துப்பாக்கிக் கலாசாரம் வளர அனுமதித்தவர் கருணாநிதியே என்று தாம் முன்னர் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படுகின்றன என்று அவர்கள் மார் தட்டுவார்கள்.

இது விடயத்தில் தி.மு.க. ஒரு திரிசங்கு நிலையையே எதிர் நோக்குகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[உ-3]

## சிறைவைக்கப்பட்டிருக்கும் சுப்புலக்ஷ்மியைச் சந்திக்க கலைஞருக்கு அனுமதி மறுப்பு

சென்னை, ஜூன் 18.

பத்மநாபா கொலைவழக்கு தொடர்பாக தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த ஆறுமாத காலமாக மதுரை சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தி. மு. க. முன்னாள் அமைச்சர் சுப்புலக்ஷ்மி ஜெகதீசனையும் அவரது கணவரையும் சிறையில் சந்திக்க கலைஞர் கருணாநிதிக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

காவலில் வைக்கப்பட்டுள்ளோரின் நெருங்கிய உறவினர்கள் மட்டுமே அவர்களைப் பார்வையிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டதாம்.

தமக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து கருணாநிதி ஆட்சேபம் தெரிவித்துள்ளார். [உ-3]

## கலந்துரையாடல்

வண்ணார்பண்ணை - ஜூன் 18

கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்புகள் நடைபெறும் பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, இன்று காலை 10 மணிக்கு யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

[த - 162]

## தினேஷ் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 18

புலிகளுக்கு ஆயுதங்கள், வெடி மருந்துகள் ஆகியவற்றை வழங்கும் கப்பல் நிறுவனங்கள், ஏஜென்சிகள் ஆகியவை குறித்து விடுதலைப் புலிகள் பிரமுகர்களுக்கு மாலுமிகளுக்கான கடவுச் சீட்டுகள் வழங்கப்பட்டமை தொடர்பாகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

கொழும்பு மாவட்ட மக்கள் ஐக்கிய முன்னணி எம். பி. திரு. தினேஷ் குணவர்த்தனா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கோரினார். (உ-எ)

## வேலை நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 18

தலவாக்கொல்லை கிறேட் வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 750 தொழிலாளர்கள் 33 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த திங்கள் முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர்.

[உ-3]

## வெடி விபத்தில் 4 இந்தியர் பலி

குவைத், ஜூன் 18

குவைத்தில் இடிபாடுகளை அகற்றுவதில் ஈடுபட்டிருந்த 4 இந்தியர்கள் உட்பட 5 பேர் திடீரென்று ஏற்பட்ட வெடி விபத்து ஒன்றில் கொல்லப்பட்டனர்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரும் மற்றும் ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய இடங்களைச் சேர்ந்த 4 இந்தியர்களே கொல்லப்பட்டவர்களாவர். இறந்த ஐந்தாவது நபர் பிரிட்டிஷ் பிரஜையாவார். [த]

## 'கேக்' கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 18

யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமியினர் ஏற்பாடு செய்துள்ள கேக் கண்காட்சி இன்று காலை 7-15 மணிக்கு யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரினால் ஆரம்பித்து வைக்கப்படும்.

கண்காட்சி நல்லூர் நாயன்மார் வீதியில் அமைந்துள்ள யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமியில் இன்று தொடக்கம் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணியிலிருந்து மாலை 6 மணி வரை நடைபெறும்.

[த]

## இந்திய - ரஷ்ய கூட்டு தொழில் முயற்சி

மாஸ்கோ, ஜூன் 18

மூன்றாவது உலக நாடுகளுக்காக டாங்கிகளையும், விமானங்களையும் உற்பத்தி செய்யவும், ஏற்றுமதி செய்யவும் இந்தியாவில் கூட்டுத் தொழில் முயற்சிகளை நிறுவ ரஷ்யா முன்வந்திருப்பதாக ரஷ்யத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ரஷ்ய வெளிநாட்டு நாணயத்தை சம்பாதிக்க ஆயுத விற்பனை ஒரு முக்கிய வழியாகும் என்றும் அப் பேச்சாளர் சொன்னார்.

[த]

## யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய ரூ. 2 கோடி பெறுமதியான பொருள்கள் கொழும்பில்!

### 2 வருடங்களாகத் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பில் தேங்கிக் கிடக்கும் — யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய — இரண்டு கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள், இரசாயனப் பொருள்கள் ஆகியவற்றை வடக்கே எடுத்து வருவதற்கான அனுமதியை வழங்க கூட்டுப்படைத் தலைமையக அதிகாரிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றனர்.

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குப் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்துக்கு என வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட — சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான — இரசாயன உபகரணங்கள் இங்கு கொண்டு வரப்பட முடியாத நிலையில் கொழும்பில் வைக்கப்பட்டுள்ளன.

அவற்றை இங்கு எடுத்து வர அனுமதி வழங்குமாறு கூட்டுப்படைகள் தலைமையக அதிகாரிகளிடம் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா கோரிக்கை விடுத்திருந்தார். அவரது கோரிக்கை குறித்து பின்னர் ஆராய்ந்து பதில் அளிப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனராம்.

[உ-3]

ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
சுன்னாகம்.

## பொதுக் கூட்டம் - 1992/1993

மேற்படி பழைய மாணவர் சங்க பொதுக் கூட்டம் ஜூலை 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள் தங்களது அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறும், இது வரை சேராதவர்கள் அங்கத்தவர்களாக சேரும் வண்ணமும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மதிய உணவு ரூபா 30/-. இதை 14-07-1992 இற்கு முன்னதாக செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

ஆ. மகாலிங்கம்.
தலைவர்.

சேது. விபுலானந்தா,
செயலாளர்.

கந்தரோடை,
சுன்னாகம்.

[சி-2481]

## வர்த்தகமும் நிதியும் - I

மாதிரி வினாத்தாள் பரீட்சை

G. C. E. (A/L) 1992 August

பிரிவு மாணவர்களின் நலன் கருதி

30 06-1992 செவ்வாய்
பி. ப. 12-30க்கு நடைபெறும்.

பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் மாணவர்கள் உடனடியாக பெயர்களைப் பின்வரும் நிறுவனங்களில் பதிவு செய்து கொள்ளவும்.

- ★ விக்னா ரியூசன் சென்ரர் — யாழ்ப்பாணம்
- ★ சிவாகி — சாவகச்சேரி
- ★ NCA — நெல்லியடி
- ★ NCA — பருத்தித்துறை

மேலதிக விவரங்களுக்கு:-
மேற்குறிப்பிட்ட நிறுவனங்களை நாடவும்.

பரீட்சகர்:
T. S. R. Ragunathan.

[சி-2693]

## யாழ்ப்பாண மாநகரசபை

## டிராக்டர் கொள்வனவுக்கான கேள்வி அறிவித்தல்

பாவனையிலுள்ள பெட்டியுடன் கூடிய டிராக்டரைக் கொள்வனவு செய்வதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட விற்பனை விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படக் கூடிய பிணைப்பணமாக ரூபா 500/- உம், மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/-உம் செலுத்தப்படுவதன் பேரில் 01-07-1992 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை எம்மால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களிலேயே விற்பனை விலைகள் குறிப்பிடப்பட்டு 03-07-1992 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு முன்னர் மாநகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகச் சேர்க்கப்படுதல் வேண்டும். கேள்விகள் அதே தினம் பிற்பகல் 2-30 மணிக்கு திறக்கப்படும்.

மேலதிக விவரங்களை மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
16-06-1992

(சி-2128)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, தலைமையகம்,

## தோல் பதனிடும் தொழிலாளர்

மேற்படி எமது பணிமனையில் தோல் பதனிடும் பயிற்சிநெறி இலவசமாக நடத்தப்படவுள்ளது.

பயிற்சிநெறி பயில விரும்பும் ஆற்றலும், அனுபவமும், தகுதியும் உள்ளோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 23-06-92 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 24-06-92 காலை 10-00 மணிக்கு நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
16-06-1992.

[சி-2127]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரும்பு வேலைத்தலத்திற்குரிய ஆயுதங்கள், Singer தையல் மெஷின். வீட்டுத்தளபாடங்கள், லினோலியம், தமிழ்-ஆங்கில தட்டச்சுக்கள், Bottle Coolers, Deep Freezer, Air Conditioner-ஜெயா ஏலவிற்பனைப் பகுதி, டாஸ் கொப்பெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [4767]

எல்லா வகுப்புகளுக்கும் ஏற்ற இலகு தமிழ் இலக்கணம். ரூபா 12-50. தமிழ்த் தென்றல் - யாதுமூரானின் கவிதைகள் விலை ரூபா 20-00. பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும். [21426]

Prima - Lohman சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் உடன் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (21430)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 30 வயது, பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்று, லீகில் நிற்கும் மணமகனுக்கு மணமகள் தேவை. நட்சத்திரம்: சுவாதி. 4 இல் செவ்வாய், திருமணத்திற்கு சீதனம் தடையாக இருக்க மாட்டாது. ABCDE விவாகப் பொருத்துனர் இல. 20, கண்டி வீதி, சுண்டிக்குளி. (21419)

### இலவச திருமண சேவை

35 வயது, ரோகிணி, சைவ போசனம், சங்கீத Diploma உடையவருக்கு தகுந்த மணமகன் தேவை. வெளிநாடும் விரும்பத்தக்கது. தொடர்பு: ஞாயிறு காலை. து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4761]

### றோணியோ

குறைந்த செலவில் குறித்த தவணையில், தரமான முறையில் றோணியோ செய்து கொடுக்கப்படும். அறிவகம் புத்தகசாலை. வெலிங்டன் சந்திக்கு அருகாமை 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/2682)

### ஜோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? தொழில் விருத்தியடையுமா? விவாகம் நடைபெறுமா? எதுவானாலும் உரிய பதில் அளிக்கப்படும். தொடர்பு: நேரம் (தினமும்) காலை 8-00 முதல் நண்பகல் 12-00 வரை, த. சிவானந்தன், பிரபல சோதிடர், இல. 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தினமும் பிற்பகல் 3-00 - 7-00 வரை. [21410]

உங்களுக்குரிய சகல கஷ்டங்களும், பிரச்சினைகளும் தீர சாதகத்துடன் வரவும். ஸ்ரீ மாவை விநாயகப் பெருமானின் அருட்சக்தி பொய்யாமொழியாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திரும்பப்பெற உத்தரவாதம்; ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம். இல;96, கோவில் வீதி. (ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி) நல்லூர். (21378)

---

## YOGI'S CAKE AND SUGAR CRAFT EXHIBITION

மேற்படி கேக் கண்காட்சி
18-06-92 வியாழக்கிழமை காலை 7-15 மணிக்கு
யாழ். அரச அதிபர்
திரு. கே. மாணிக்கவாசகர் அவர்களால்
ஆரம்பித்து வைக்கப்படும்

18 - 06 - 92 தொடக்கம் 22 - 06 - 92 வரை காலை 9-00 மணி தொடக்கம் மாலை 6-00 மணி வரை தினமும் கண்காட்சி நடைபெறும்.

நடைபெறும் இடம்:-
**யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி,**
71B, நாயன்மார் வீதி,
கச்சேரி - நல்லூர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[சி/2681]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 02 — 1935

மறைவு: 30 — 06 — 1991

### அமரர் வேலாயுதபிள்ளை செல்வரத்தினம்

[பரந்தன் இரசாயனப் பொருள்கள் - கூட்டுத்தாபனம்]
திதி: 18—6—1992

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், குடும்பத்தின் குலவிளக்காய் எங்களை வாழ வைத்த தெய்வமே! நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும், உங்கள் நினைவு உயிருள்ளவரை நிலைத்திருக்கும்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள்,
மருமகள்.

புகையிரத நிலையப் பக்கம்,
எழுதுமட்டுவாள். [21397]

---

## நன்றியுடன் நினைவு கூருகின்றோம்



மலர்வு: 18 — 06 — 1918

உதிர்வு: 09 — 04 — 1990

### அமரர் உவில்லியம் ஞானசிகாமணி அன்னப்பா

(இளைப்பாறிய அதிபர், மானிப்பாய் - மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

''நான் கர்த்தருடைய வீட்டில்
நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன்''

சங். 23: 6

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, மைத்துனர்.

யாழ்ப்பாண வீதி,
மானிப்பாய். [4768]

---

## தென் இந்திய திருச்சபை யாழ். பேராயம்
## யாழ்ப்பாண திருச்சபை

யாழ்ப்பாணத் திருச்சபை தங்களுடைய வழிபாட்டு ஆராதனைகளை எதிர்வரும் 21-06-1992 முதல் அவர்களது புதிய நிலையமான நகர்ப்புற பணியகத்தில் - 41, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளனர்.

21-06-1992 இல் காலை 8-00 மணிக்கு திருவிருந்து வழிபாடும் தொடர்ந்து ஓய்வு நாட் பாடசாலையும் நடைபெறும். தென் இந்திய திருச்சபை அங்கத்தவர்கள் அனைவரும் விலாச மாற்றத்தைக் கவனிக்கவும். ஆராதனையில் பங்கு கொள்ளுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

செயலாளர்,
தென் இந்திய திருச்சபை.

(சி-2691)

---

## தென் இந்திய திருச்சபை யாழ். பேராயம்

நகர்ப்புற பணியகம், யாழ்ப்பாணம்.
City Mission, Jaffna.

## தொழிற்பயிற்சி நெறி

மேற்படி நிலையத்தில் [தையல், ஆங்கில, தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியன ஆரம்பிக்கப்படவுள்ளன. இந் நெறிகளில் கலந்து கொள்ள ஆர்வமுள்ளோர், 30 - 06 - 1992க்கு முன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பொறுப்பாளர்,
தென் இந்திய திருச்சபை,
நகர்ப்புறப் பணியகம்,
41, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

திட்டப் பொறுப்பாளர்,
தென் இந்திய திருச்சபை.

(சி-2689)

---

## 1992/1993 G.A.Q
## 1st in Com.

யாழ். பல்கலைக் கழகத்தினால் மேற் கூறப்பட்ட பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விரிவுரைகள் ஆரம்பம்:
21—06 - 1992 [9—00 மணி]

விவரங்களுக்கு:
நிர்வாகி,
S. அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி,**
[New College of High Studies]
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

[சி-2684]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 24 — 10 — 1902

மறைவு: 19 — 05 — 1992

### அமரர் நல்லம்மா சண்முகம்

தலைவனை இழந்து, தனம் இழந்து, தாழ்வுற்று நின்ற வேளையிலும், உன் [ஊனையே உருக்கி, அறிவூட்டி, எம்மைத் தலையெடுக்க வைத்த அன்புத் தாயே! துயரத்தால் கலங்கும் எமது இதயங்களில் என்றென்றும் நிலைத்திருந்து, நல்வழி காட்ட வேண்டுகின்றோம்.

உங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

62/2, யா. இ. க. ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [4769]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## மீள் சபதத்துக்கு ஞாபகமூட்டல்!

தமிழர் பிரச்சினைக்கான எந்தத் தீர்விலும், ஒரு பகுதியாகத் தானும், வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பை அரசாங்கம் அனுமதிக்கமாட்டாது.

இவ்வாறு வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, வெகு அழுத்தமாக, தெளிவாக அறிவித்திருக்கிறார் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசா.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, சமாதானத் தீர்வு என்று இத்தனை நாளாக ஆசாடபூதித் தனம் காட்டி வந்த ஜனாதிபதி, கடந்த திங்கட்கிழமை தமது உண்மை வடிவத்தை - சிங்களப் பேரினவாத இதயத்தை - திறந்து காட்டியிருக்கிறார்!

''இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தீர்வு ஒன்றைக் காண்பதற்கு, வேண்டுமானால் எனது பதவியைக் கூடத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன்''— என்று கூறிய ஒரு வார காலத்தில் வடக்கு-கிழக்கு இணைப்பைத் தாம் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் முதன்மையானது, பிரிக்கப்படாத தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை உடைத்த பின்னர் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதியும், அரசாங்கத்தினரும் நினைப்பது அவர்களின் அரசியல் மடத்தனம் மட்டுமன்றி விட்டுக்கொடுக்காத வீம்புத்தனமுமாகும்.

தமிழர்கள் ஒரு தனியான தேசிய இனத்தினர். அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு. தங்கள் தாயகம் பிரிக்கப்படாமல் காக்கும் உரிமை உண்டு. தமக்கென ஓர் அரசை உருவாக்கவும், பிரிந்து போகவும் உரிமை உண்டு.

இந்த உரிமைகளை சிங்களப் பேரினவாதம் ஒருபோதும் புரிந்து கொள்ளப்போவதில்லை; அங்கீகரிக்கப் போவதில்லை. இலங்கை ஒரு சிங்கள - பௌத்த நாடாக இருக்க வேண்டும் என்ற பழைமையான கற்பனை உலகில் அது சஞ்சரிக்கிறது.

ஆகையால் வடக்கு- கிழக்கு இணைக்கப்படாத தீர்வு ஒன்றைத் தமிழர்கள் மீது திணிப்பதே அரசாங்கத்தின் நோக்கம். அதற்காகவே பிரேமதாசா கடந்த இரண்டு வருடகாலப் போரை நடத்தி வருகிறார். தமிழர்களை அழித்து வருகிறார். தமிழர் தாயகத்தைச் சிதைத்து வருகிறார். சிங்களக் குடியேற்றத்தால் உருமாற்ற முயல்கிறார்.

அதிகாரப் பரவல், சுயாட்சி என்ற இனிப்பை மேலே தடவி, தமிழர் தாயகத்தை உடைத்து விட எடுக்கும் எந்தத் தீர்வையும் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் — ஏற்க முடியாது.

சிங்களவர்களுடன் நட்பு பூண்டு, அரசாங்கத்துக்கு ஆதரவளித்து தமிழர்கள் தங்கள் உரிமைகளைப் பெற முடியாது என்ற உண்மையை பிரேமதாசா தமிழர்களுக்கு மீண்டும் ஒருமுறை ஞாபகப் படுத்தி இருக்கிறார். அவ்வளவு தான்!

இந்த ஞாபக மூட்டுதலை ஒவ்வொரு தமிழனும் கருத்தில் கொண்டு தனது உரிமைகளுக்காகப் போராடுவதற்காக மீள் சபதம் செய்து கொள்ள வேண்டும். தாயகத்தைக் காப்பாற்ற அவதானமாகவும், விழிப்பாகவும் அதே வேளை எழுச்சியுடனும் வீரத்துடனும் முன்னேற வேண்டும் என்பதை மனதிலிருத்தி அதன்படி செயலாற்ற வேண்டும்.

## ராஜ்யசபை எம். பியாக கவாஸ்கர் நியமனம்?

புதுடில்லி, ஜூன் 18

பிரபல கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் ராஜ்ய சபைக்கு நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ராஜ்ய சபைக்கு ஆறாம் காங்கிரஸ் கட்சி நியமிக்கவுள்ள எம். பிக்கள் பட்டியலில் சுனில் கவாஸ்கரின் பெயரும் இருப்பதாக சொல்லப்படுகின்றது.

ராஜ்ய சபையில் காலியான இடங்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் மாநிலங்களின் சட்டசபைகளில் நடைபெற இருக்கின்றன. அந்தத் தேர்தல் முடிவடைந்தவுடன், ராஜ்யசபைக்கு நியமிக்கப்படும் எம். பிக்களின் பெயர்ப் பட்டியலை பிரதமர் நரசிம்மராவ் விரைவில் வெளியிடுவார்.

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிடுமாறு திரு. கவாஸ்கர் கேட்டுக் கொள்ளப்பட்டார். ஆனால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. கவாஸ்கர் காங்கிரஸ் அனுதாபியாக இருந்தும், அவர் தன்னை பகிரங்கமாகக் காங்கிரஸ் வாதியாகக் காட்டிக்கொள்ள விரும்பாததே இதற்குக் காரணமாகும்.

ஆனால் நியமன எம். பியாக வரும் ஒருவர் கட்டாயமாக காங்கிரஸ்காரராகத் தம்மைக் காட்டிக் கொள்ள வேண்டியதில்லை என்பதாலும்—

பல துறைகளில் விற்பன்னர்களாக இருப்பவர்களையே நியமன எம். பிக்களாக ஆளும் கட்சி தெரிவு செய்வது வழக்கம் என்பதாலும்—

ராஜ்ய சபை எம். பி. நியமனத்தை ஏற்கும்படி கவாஸ்கரை அவரது அபிமானிகள் வற்புறுத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆளும் காங்கிரஸில் கவாஸ்கரின் தீவிர விசிறிகளாக இருக்கும் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார், விமானப் போக்குவரத்து அமைச்சர் மாதவராவ் சிந்தியா ஆகியோர் கவாஸ்கரை ராஜ்ய சபை எம். பியாக்குவதில் அக்கறையுடன் செயல்படுகின்றனர்.

கவாஸ்கர் மறுக்கும் பட்சத்தில் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் மன்சூர் அலிகான் பட்டோடி, பிஷன்சிங்பேடி, ஆகியோரின் பெயர்களும் நியமன எம். பி. பதவிக்கு பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

பட்டோடி கடந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு தோல்வியடைந்தவர். பேடிக்கு காங்கிரஸில் அவ்வளவு ஆதரவு இல்லை.

பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த ஒருவரை நியமன எம். பியாக்கப் பிரதமர் ராவ் விரும்பவில்லையாம்.

125 டெஸ்ட் பந்தயங்களில் விளையாடிய கவாஸ்கர் இந்திய அணியின் கப்டனாக இருந்தவர், டெஸ்ட் பந்தயங்களில் 10 ஆயிரத்து 122 ஓட்டங்களை எடுத்து உலக சாதனை ஒன்றை நிலைநாட்டியவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது [உ-எ]

## நிவாரணம் வழங்கும் பொறுப்பு உ. அதிபர்களிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வலிகாமம் வடக்குப் பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரண வேலைகளை அவர்கள் இப்போது தங்கியுள்ள பகுதிகளைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்கள் கவனிப்பார்கள்.

நிவாரண வேலைகள் சம்பந்தமான சகல பொறுப்புகளும் இடம்பெயர்ந்தோர் இப்போது தங்கியுள்ள பகுதிகளின் உதவி அரசாங்க அதிபர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதாக செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வார இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களில் பலர் ஏற்கனவே நிவாரணம் பெற்று வருபவர்கள். ஆகையால் புதிதாக இடம்பெயர்ந்தவர்களையும் இனங்கண்டு நிவாரணம் வழங்கும் பொறுப்பு உதவி அரசாங்க அதிபர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும்—தெரிவிக்கப்பட்டது.

### கடந்த மூன்றாண்டுகளில்

## ஆயிரக்கணக்கானோர் கொலை: விசாரணை நடத்தப்படவேண்டும்

### உடுகம்பொல கோருகிறார்

கொழும்பு, ஜூன் 18

கடந்த மூன்றாண்டுகளில் நீதிக்கு முரணான முறையில் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் ஆயிரக்கணக்கானோரின் மரணங்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்றை அரசாங்கத்தினால் ஏன் நியமிக்க முடியாது?

முன்னாள் பிரதிப்பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல புதிதாக விடுத்த அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு கோரியுள்ளார்.

கடந்த வாரம் திரு. உடுகம்பொல தமது கையெழுத்தில் இந்த அறிக்கையை விடுத்திருந்தார்.

அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது; சிறிய விஷயத்துக்கும் கூட குழுக்களையும், ஆணைக்குழுக்களையும் நியமிக்கும் பெருமை படைத்தது இந்த அரசாங்கம்.

அரசியல் கொலைகளுக்கு ஜனாதிபதியும், அவரது அரசாங்கமும் பொறுப்பு அல்ல என்று சொன்னால், இம்மரணங்கள் குறித்து விசாரிக்க சுதந்திரமான அமைப்பு ஒன்றை ஏன் நிறுவ முடியாது? நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விவாதம் ஒன்றுக்கு ஏன் அரசாங்கம் சம்மதிக்கக்கூடாது?

தெற்கு, வடமத்திய மற்றும் மத்திய மாகாணம் ஆகிய பிரதேசங்களில் பிரதிப் பொலீஸ் மா அதிபர் என்ற வகையில் நான் பணிபுரிந்த சமயம் இக்கொலைகளை நான் கண்டேன். இக்கொலைகளை நான் அப்போது எதிர்த்துள்ளேன். எனது எச்சரிக்கையை அவர்கள் பொருட்படுத்தாமல் கொலைகளைத் தொடர்ந்து செய்தனர்.

கடந்த மூன்று ஆண்டுகளில் நீதிக்கு முரணான முறையில் 40 ஆயிரம் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப்பட்டதற்கு யார் பொறுப்பு?

கறுப்புப் பூனைகள் எப்படி இக்கொலைகளைச் செய்தனர் என்பது Sri Lanka — a Lost Revolution என்ற புத்தகத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. கறுப்புப் பூனைகளுக்கு எவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டது என்பது பற்றி அப்புத்தகம் விவரிக்கிறது. கறுப்புப் பூனைப்படையில் உள்ள ஒவ்வொருவருக்கும் 3,000 ரூபா சம்பளமும், தங்குமிடம் மற்றும் போக்குவரத்து வசதிகளும் வழங்கப்பட்டன என்பது பகிரங்க ரகசியமாகும்.

இவ்வாறு திரு. உடுகம்பொல தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார் என்று 'சண்டே ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

திரு. உடுகம்பொல சாரம் அணிந்து காட்சியளிக்கும் புகைப்படத்தையும் 'சண்டே ஐலண்ட்' வெளியிட்டுள்ளது.

## செஞ்சிலுவை வாகனங்களும் தாண்டிக்குளத்தில் சோதனை

கூட்டுப்படைத் தலைமையக அனுமதிப் பத்திரத்துடன் வந்த செஞ்சிலுவைச் சங்க வாகனங்களை தாண்டிக்குளம் சோதனை முகாமில் படையினர் தடுத்து வைத்தனர்.

வழமையாக இந்த அனுமதிப் பத்திரத்துடன் வரும் செஞ்சிலுவைச் சங்க மற்றும் சுகாதாரத் திணைக்கள வாகனங்கள் வடக்கே வர உடனடியாக அனுமதிக்கப்படுவது உண்டு.

ஆனால் சனிக்கிழமை காலை இந்த அனுமதிப் பத்திரத்துடன் வந்த செஞ்சிலுவைச் சங்க வாகனம் மற்றும் அம்புலன்ஸ், சுகாதாரத் திணைக்கள வாகனம் ஆகியவற்றை படையினர் வவுனியாவில் தடுத்து வைத்தனர்.

புதிய நடைமுறையின்படி இந்த அனுமதிப் பத்திரம் உண்மையானதா என்பது குறித்து கொழும்புத் தலைமையக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தப்படும். அதன் பின்னரே வடக்கே செல்ல அனுமதிக்க முடியும் என்று படையினர் தெரிவித்தனர்.

கொழும்புடன் தொடர்பு கொண்டு மாலை 5 மணிக்கே வாகனங்கள் வடக்கே வர அனுமதிக்கப்பட்டன. [த-3]

## மலையகத்தில் மீண்டும் கொள்ளைச் சம்பவங்கள்

மலையகத்தின் சில பகுதிகளில் இராணுவச் சீருடை போன்ற உடைகளை அணிந்து வரும் கொள்ளையர்களின் கைவரிசை மீண்டும் அதிகரித்து வருகிறது. பொலீஸ் அறிக்கைகள் இத் தகவலைத் தெரிவிக்கின்றன.

குறிப்பாக மாத்தளை மாவட்டத்திலேயே இது போன்ற கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக எச்சரிக்கப்படுகிறது

அடிக்கடி மலையகத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் இடம்பெற்று வரும் இத்தகைய கொள்ளைச் சம்பவங்கள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என தோட்ட தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [உ-த]

## விடுதலைஉணர்வை விதைத்த சிறந்த கவிஞர் கஸ்தூரி

### நூல் வெளியீட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 18

இந்தியப் படையினரால் ஏற்பட்ட தாக்கங்களும் பாதிப்புக்களும் எத்தகையன என்பதை கஸ்தூரியின் ஆக்கங்களினூடாக நாம் புரிந்து கொள்ளலாம். இவர் ஒரு சிறந்த போராளி மட்டுமல்ல, விடுதலை உணர்வுகளை மக்கள் மத்தியில் விதைத்த சிறந்த கவிஞரும் எழுத்தாளரும் கூட. அவரது ஆளுமையை ஒலிப்பதிவு நாடாக்களினூடாக தெரிந்து கொள்ளமுடியும்.

இவ்வாறு ''கஸ்தூரியின் ஆக்கங்கள்'' வெளியீட்டு விழாவில் பேசிய விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அண்மையில் இடம் பெற்ற இந்நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு. யோகரத்தினம் யோகி பேசும் போது—

எமது மண்ணையும், இழந்த உரிமைகளையும் மீட்டெடுத்து சுதந்திரமாக வாழ்வதற்காக எதிரியுடன் போராடிக் கொண்டிருக்கிறோம். இந்தப் போரில் எத்தனையோ போராளிகள் தம்மை தியாகம் செய்துள்ளனர்.

அந்த வகையில் கஸ்தூரி எனும் போராளியுடன் ஒரு நல்ல கவிஞனையும் இழந்துள்ளோம் என்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த மகளிர் முன்னணிப் பிரமுகர் ஜெயா, ''போராட்டம் வலுப்பெற எழுத்தாளர்களின் பங்கு முக்கியமானது. கஸ்தூரி போராளியாகவும் எழுத்தாளராகவும் இருந்து தனது பணியை நிறைவேற்றியுள்ளார்'' என்றார்.

திருமதி அடல் பாலசிங்கம் நூலை வெளியிட்டார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், செல்வி பாரதி, செல்வி ஆர்த்தி, செல்வி மாலினி, கஸ்தூரியின் தந்தை திரு. கணேசன் ஆகியோரும் உரையாற்றினார்கள். [ஒ-111]

## வெள்ளவத்தையில் இந்து கலாசார நிலையம்

வெள்ளவத்தை மயூரா வீதியில் அமைந்துள்ள ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு அருகில் இந்து கலாசார நிலையத்துக்கான 4-மாடி கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

1 கோடி 50 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட இருக்கும் இதற்கான கட்டட அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

20 பேர்ச்சேஸ் காணியில் அமையவுள்ள இக் கட்டடத் தொகுதியில் கல்யாண மண்டபம், இந்து சமயப் பாடசாலை, குருமாருக்கான வசிப்பிடம் ஆகியன நிறுவப்படவுள்ளன. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தில் உள்ள வளங்களை முழுமையாக பயன்படுத்த வேண்டும்

## ஆய்வு நிறுவன கைநூல் வெளியீட்டில் யோகி

யாழ்ப்பாணம், ஜூன் 18
தமிழீழத்தில் இருக்கக்கூடிய வளங்களை முழுமையாகப் பயன்படுத்த நாம் முன்வர வேண்டும். மணலாற்றில் மீன் பிடிக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தும் சாதி அடிப்படையை மையமாகக் கொண்டு இருந்தமையால் அந்த மாற்றான் எமது வளத்தைச் சுரண்ட இடமளித்தோம்.

''உணவுத் தேவைகளும் உற்பத்தி இலக்குகளும்'' என்னும் புள்ளிவிவரக் கைநூலை வெளியிட்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க கல்விப் பொறுப்பாளர் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் சார்பில் நேற்று இடம்பெற்ற இந்நிகழ்ச்சியில் திரு. யோகி மேலும் பேசியதாவது:-

நெருக்கடி நிலையிலும்கூட இந்த மண்ணின் வளத்தையும், இம் மண் மூலம் நாம் பெறக்கூடிய பயனையும் இந்நூல் மக்களுக்கும் உலகுக்கும் உணர்த்தக்கூடிய வகையில் ஆக்கப்பட்டுள்ளது.

நாம் பிறரிடம் அடிமையாக வாழமுடியாது. எமது அறிவையும், ஆற்றலையும் உலகம் வியக்கிறது.

மாற்றத்தின் பின் நாம் முழுமையாக நிற்க அந்நியனிடம் எமது வழங்களை இழந்துவிடாத வகையில் எல்லோரும் ஒன்றுபட்டுழைப்போம்

இப்படி அவர் கூறினார்.

நூலின் முதல் பிரதியை தமிழீழ ஆய்வு நிறுவன பொறுப்பாளர் திரு. ர யிடம் இருந்து விடுதலைப்புலிகள் இயக்க மூத்த உறுப்பினர் இளங்குமரன் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்கு திரு. ஞா. அருள்நேசன் தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

யாழ். திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன், புள்ளி விவரப் பிரிவைச் சேர்ந்த திரு. கந்தையா, வைத்திய அதிகாரி முருகானந்தம், திரு. ஜெயரத்தினம் றாயி உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். [இ-111]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவஞானம் கந்தசாமி

திருமதி சிவஞானம் கந்தசாமி காலமானார். அன்னார் காரைநகர், வலந்தலை, இலகடியைச் சேர்ந்த கந்தர் முத்தையா [மலாயன் பென்சனர்] தங்கப்பிள்ளையின் அன்பு மகளும், 7 ஆம் கட்டை சண்டிலிப்பாயைச் சேர்ந்த சபாபதி கந்தசாமியின் [துணை அதிபர் யா / சண்டிலிப்பாய் இந்து ம. வி.] அன்பு மனைவியும் விஜிதா, சுதர்சன், சிவசங்கர், பபிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr. M. கனகராசா [அவுஸ்திரேலியா], M. நடராசா [பரிசோதகர் சுகாதார இலாகா கொழும்பு], M. செல்வராசா [ஹற்றன் நாஷனல் வங்கி கொழும்பு], பராசக்தி, சிவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 18-6-92 வியாழக்கிழமை பி. ப. 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அன்புள்ளம் கொண்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவுடன் வேண்டுகிறேன்.

தகவல்:
ச. கந்தசாமி
[கணவர்]

7 ஆம் கட்டை,
சண்டிலிப்பாய்.

[C / 2131]

## அம்பலவாணர் (சின்னவாணர்) ஜெகநாதன

[அரசாங்க ஒப்பந்தகாரரும், விலைமதிப்பாளரும்]

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் ஜெகநாதன் 16-6-92 இல் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் கற்பகம் தம்பதிகளின் மகனும், பதுளை முத்தையா - ஞானம்மா அவர்களின் பெறாமகனும், கரம்பொன் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சந்தனம் ஆகியோரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், ஹம்சா, வனிதா, விஜிதா ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற பத்மநாதன், நரேந்திரநாதன், சண்முகநாதன், கமலாதேவி, கயிலாயநாதன், சபாநாதன், சத்தியநாதன் ஆகியோரின் சகோதரரும், லீலாவதி, நயயோகம், கனகலட்சுமி, பேரம்பலம், சாந்தாதேவி, பராசக்தி, ஆனந்தகல்யாணி, சிவபாலன், பரராசசிங்கம், அருந்ததி, லீலாவதி, விமலாதேவி ஆகியோரின் மைத்துனரும், மாணிக்கவாசகர், முத்துக்குமாரு ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் இடம் பெறும். துக்கநிகழ்வுகள் அம்மன்வீதி, கந்தர்மடத்தில் நடைபெறும்.

தகவல் :
ஜெ. விஜிதா
[மகள்]

16A அம்மன்வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[21435]

## திருமதி றெபேக்கா மதுரமணி லோறன்ஸ்

(ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்)

திருமதி றெபேக்கா மதுரமணி லோறன்ஸ் காலமானார். இவர் திரு. கிளெமென்ட் லோரன்ஸ் சேனாதிராஜா [ஓய்வு பெற்ற ஆசிரியர், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.] அவர்களின் அன்பு மனைவியும், செல்வி புஸ்பதேவி லோறன்ஸ் [ஆசிரியை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.], Dr. ஆனந்தராஜா அவர்களின் அன்புத் தாயாரும், ஆனந்தராஜா தேவிகாராணியின், அன்பு மாமியாரும், திலகராணி [மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], சேனாதிராஜன் [மாணவன், பரி. யோவான் கல்லூரி], ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு பரிசுத்த மரியாள் சேமக் காலையில் நடைபெறும்.

தகவல்:
Dr. ஆனந்தராஜா லோறன்ஸ்
[மகன்]

41, ஈச்சமோட்டை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[21428]

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூன் 18
யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று — 17 வயதுக்குட்பட்டோருக்கு இடையிலான ஆட்டத்தில் சுன்னாகம் ஸ்கந்தா அணியும் மகாஜனா அணியும் மோதுகின்றன.

இந்த ஆட்டம் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். [ஓ]

## பிலிப்பீன்ஸ் தேர்தலில் ராமோஸ் வெற்றி

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகள் அனைத்தும் எண்ணப்பட்ட நிலையில் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் பிடல் ராமோஸ் ஏழரை லட்சத்துக்கு அதிகமான பெரும்பான்மையான வாக்குகளினால் வெற்றியீட்டியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## 42 படையினர் விபத்தில் மரணம்

கெய்ரோ, ஜூன் 18
எகிப்தில் நேற்று இடம் பெற்ற வீதி விபத்து ஒன்றில் 42 இராணுவத்தினரும் 6 குடிமக்களும் கொல்லப்பட்டனர். 15 பேர் காயமுற்றனர்.

இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற டிரக் எண்ணெய் தாங்கி வாகனம் ஒன்றுடன் மோதியபோது இந்த விபத்து நிகழ்ந்தது. [இ-10]

## இந்தியாவின்...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

கேட்டிருக்கிறது என்றும் இந்த வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் திரு. விரக்கஸ் கூறினார். (ஓ-ஏ)

# தனியார் பஸ் சேவை கொழும்பில் ஸ்தம்பிதம்

## பயணிகள் பெரும் அவதி

கொழும்பு, ஜூன் 18
கடந்த 15ஆம் திகதி மொரட்டுவையில் ஆரம்பமான தனியார் பஸ் போக்குவரத்து சேவை நிறுத்தம் தற்போது மேல் மாகாணம் [கொழும்பு] முழுவதிற்கும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிவில் உடையில் பொலீஸார் பஸ்களுக்குள் ஏறி சோதனையிடுவதையும், ஒரே தடவையில் ஒன்றுக்கு மேற்பட்ட அபராதங்கள் விதிப்பதையும் நிறுத்த வேண்டுமென தனியார் பஸ் சாரதிகள் கோரிக்கை விடுத்து சேவை நிறுத்தம் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் சேவை நிறுத்தத்தால் கொழும்பில் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பயணிகள் அரச பஸ் சேவையை எதிர்பார்த்து நீண்ட வரிசையில் நின்றனர்.

அரச பஸ்களில் மக்கள் முண்டியடித்துக்கொண்டு பயணம் செய்வதை ரூபவாகினி ஒளிபரப்பியது

இதற்கிடையில் —

தனியார் பஸ்கள் இன்று [வியாழன்] காலை தமது சேவைகளை ஆரம்பிக்கத் தவறினால் அவர்களது பாதை அனுமதிப்பத்திரம் ரத்துச் செய்யப்படும் என அரசு தீர்மானித்துள்ளதாக மேல் மாகாண முதல் அமைச்சர் சுசில் முனசிங்க நேற்றுத் தெரிவித்தார். [ஓ-10]

## மத்திய வங்கியின் புதிய ஆளுநர்

கொழும்பு, ஜூன் 18
மத்திய வங்கியின் புதிய ஆளுநராக திரு. எச். பி. திஸாநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி இவர் புதிய பதவியைப் பொறுப்பேற்பார்.

தற்போதைய ஆளுநரான டாக்டர் எச். என். எஸ். கருணாதிலகவின் பதவிக் காலம் இம் மாதத்துடன் முடிவடைகிறது. [சி-எ]

# தொலைக் காட்சியில் சண்டமாருதம் - 2

## களத்தில் ரி 55ரக டாங்கிகளும்!!

கொழும்பு, ஜூன் 18
தெல்லிப்பழை சேந்தாங்குளம் பகுதிகளில் இடம் பெற்றதாகக் கூறப்படும் இராணுவ நடவடிக்கை பற்றிய காட்சிகள் நேற்று ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டன


மேற்படி சண்டமாருதம் — 2 நடவடிக்கையின் போது ரி - 55 ராட்சத டாங்கிகளும் பயன்படுத்தப்பட்டன.

இந்த நடவடிக்கைக்கு மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தலைமை வகித்தார் என்றும், மேலும் பல இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

இதேசமயம் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின, கடற்படைத் தளபதி கிளரன்ஸ் பெர்னாண்டோ ஆகியோர் சண்டமாருதம் - 2 நடவடிக்கை இடம்பெற்ற பகுதிகளை பார்வையிட்டனர். [ஓ-10]

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

இம்மையில் ;
14-06-1920



மறுமையில் :
19-05-1992

## அமரர் சின்னப்பா சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கலங்கரை விளக்கமாய் வந்துதித்து எம்மை நிறைந்த வாழ்க்கைக்கு வழிப்படுத்திய பாசமிகு குடும்பத் தலைவனின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

''பத்ம மஹால்''
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[21436]

# OBITUARY

Called to Rest with Jesus

## Mrs. Rebecca Mathuramani Lawrence

The death is announced of Rebecca Mathuramani Lawrence (Retired Teacher, St. Patricks College, Jaffna). Beloved wife of Clement Lawrence Senathirajah (Retired Teacher, St. Patricks College). Loving Mother of Pushpadevi (Staff, Chundikuli Girl's College), Dr. Anandarajah (Central Dispensary & Surgery, Eachchamoddai). Mother-in-law of Devikarani, Grandmother of Thilakaranie (Chundikuli Girl's College), Senathirajan (St. John's College).

Cortege leaves residence at 3-00 p. m. on (Thursday) 18th June to St. Mary's Burial grounds.

Dr. Anandarajah Lawrence
(Son)

41, Eachchamoddai Rd,
Chundikuli,
Jaffna.

[21423]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18 - 06 - 1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org